DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.199/2025**

Prosecution **PW.7**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திருமதி.கோமதி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | ரவிக்குமார் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்பொழுதுதிருப்பூர் மாவட்டம் கொங்கு நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.07.2017 ம் தேதி 18.00 மணிக்கு லாலாப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது கணிமம் மற்றும் கண்காணிபபி பிரிவில் நீர்வளத் துறை உதவி பொறியாளர் அண்ணாமலை என்பவர் அளித்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 273/2017 சட்டப்பிரிவு 468, 471, 420 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தார்.

2. அப்போது காவல் நிலையத்தில இருந்த காவல் ஆய்வாளர் திரு.சிவசுப்பிரமணியன் என்பவரின் பார்வைக்கு புலன் விசாரணைக்காக வைத்துள்ளார். மேற்படி காவல் ஆய்வாளர் அவர்கள் அன்றைய தினம் சம்பவயிடம் சென்று 19.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ரவிச்சந்திரன், பார்த்திபன் என்பவர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்து கையொப்பம் பெற்றுள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் இதர சாட்சிகள் பெரியசாமி, சந்திரபாண்டியன் , ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 20.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரில் இருந்த எதிரி சகாதேவன் என்பவரை கைதுக்காக காரணம் கூறி விதிமுறைகள் படி கைது செய்தோம். சாட்சிகள் பிரவீன்குமார், போஜராஜன் எனப்வர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** அதன்பிறகு 21.40 மணிக்கு நிலையத்தில் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இவ்வழக்கின் சொத்துக்களான TN 30x 6558, 10 சக்கரம் கொண்ட போலியான பதிவெண் கொண்ட லாரி அதன் உண்மையான எண். TN 47N 1150 என்ற பதிவெண் மற்றும் கனிமம் மற்றும் லாரி அனுமதிச்சீட்டு, அடையாளச்சீட்டு ஒப்புதல் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி எதிரியை தக்க வழிக்காவலுடன் Form–91 உடன் வழக்கின் சொத்துக்களுடன் நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன்.**கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Form–91 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பிறகு 25.07.2017ம் தேதி உதவி ஆய்வாளர் செல்வராஜ் என்பவரை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 18.09.2017ம் தேதி இவ்வழக்கின் சொத்துக்களுக்கு நீதிமன்ற ஆர்.பி .எண் பெற்றும் அன்றையதினம் சட்டப்பிரிவை காவல் ஆய்வாளர் கோமதியாகிய நான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சட்டப்பிரிவு 468, 471, 420@ 468, 471 இதச சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்ததேன். **சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் சிவசுப்பிரமணியம் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்த போது அவரிடம் கூறியதைத்தான் என்னிடமும் கூறினார்கள் அதனால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அன்றைய தினம் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1.** இந்த வழக்கில் புலன் விசாரணை செய்ததது காவல் ஆய்வாளர் சிவசுப்பிரமணியம் என்றால் சரிதான் நான் மேல்புலன்விசாரணை செய்தேன். நான் இறுதி அறிக்கை மட்டும் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இறுதி அறிக்கையில் சாட்சிகள் காவல் ஆய்வாளர் சிவசுப்பிரமணியத்திடம் சொன்னத்தைதான் என்னிடம் சொன்னார்கள் என்று சொல்லியுள்ளேனா

என்றால் குறிப்பிட்டு கூறவில்லை. வழக்கில் புகார் கொடுத்த உதவி பொறியாளர் நீர்வளத்துறை அரசு அலுவலர் என்றால் சரிதான்.

2. புகார்தாரர் அன்றைய தேதியில் பணியில் இருந்ததற்காக ஆவணம் Movement Register பெற்று வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாருடன் எந்த ஆவணத்தையும் இணைத்து தாக்கல் செய்யவில்லை எ ன்றால் சரிதான். போலியான நெம்பர் பிளேட் ஒட்டியிருந்ததை RTO அலுவலகத்தில் ஆய்வு செய்ய கொடுத்தேனா என்றால் இல்லை. நெம்பர் பிளேட் ஸ்டிக்கர் எங்கு யார் வைத்து ஒட்டினார்களா என்ற தெரிந்து கொண்டேனா என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தான் ஒட்டினார் என்று கூறினார்.

3. வாகனத்தின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வாகனத்தில் ஒட்டியிருந்த நெம்பர் பிளேட் ஸ்டிக்கர் வாகனத்தின் உரிமையாளரே வேறு யாரே ஒருவரே ஒட்டியிருக்க வாய்ப்புள்ளதா என்றால் இல்லை எதிரியே ஓட்டி மணல் எடுக்க வந்ததாக கூறியுள்ளார். இறுதி அறிக்கையில் சொன்னது போல் எதிரி எந்த விதமான நெம்பர்பிளேட் ஸ்டிக்கர் ஒட்டவில்லை என்றாலும் நாங்கள் சரியாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

4. போலியான ஆவணம் கொடுத்ததாக சொல்லப்படுவது இறுதி அறிக்கையுடன் தாக்கல்செய்யவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக காவல் நிலையத்தில தயார் செய்யப்பட்டு சாட்சி விசாரணையின் போது மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளிவிவரக்கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த வாகனமும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.19 11:05:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.